பக்கங்கள்: 08

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 22 வெள்ளிக்கிழமை 07.08.2020 கதிர் 271

இனி இது ரகசியம் அல்ல!

இந்தத் தேர்தல் சமயத்தில் பெருங்குழப்பம் செய்ததில் முக்கிய பங்கு முகப்புத்தகக் கணக்குகளைத்தான் சேரும்.

ஓரிரு Black Sheepகள் இருந்து கொண்டு பண்ணிய 'கிருமினல்' தனங்கள் சொல்லி மாளாதவை.

கையில் பக்கம்02

# சிறீதரன், சுமந்திரன், சித்தார்த்தன் யாழில் கூட்டமைப்பு சார்பில் தெரிவு





## வாக்கெண்ணும் நிலையத்தில் இன்று அதிகாலை களேபரம்

### விசேட அதிரடிப் படையினர் தடியடி மாவையின் மகனுக்கும் அடி விழுந்தது

கொழும்பு. ஓகஸ்ட் .06

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு யாழ்.மாவட்டத்தில் கிடைத்த மூன்று ஆசனங்களுக்கும் சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வாக்கெண்ணும் நிலையமாகச் செயற்பட்ட யாழ்.மத்திய கல்லூரி வளாகத்தில் இன்று அதிகாலை தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் ஏற்பட்ட தாமத சூழலில் களேபர நிலைமை உருவானது. கூட்டத்தைக் கலைப்பதற்கு விசேட அதிரடிப் படையினர் தடியடிப் பிரயோகம் செய்தனர். அங்கு திரண்டிருந்த இளைஞர் குழுவுக்கு மத்தியில் நின்ற மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதனுக்கும் அடி விழுந்தது. பக்கம் 02

## யாழ்.மாவட்டத்தில் தெரிவான ஏனையோர்


கஜேந்திரகுமார் (அ.இ.த.கா.)


அங்கஜன் (சு.க)


சி.வி.விக்னேஸ்வரன் (த.ம.தே.மு)


டக்ளஸ் (ஈ.பி.டி.பி)

## காங்கிரஸ்க்கு தேசியப் பட்டியலில் ஓர் எம்.பி. இடம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 55 ஆயிரத்து 303 வாக்குகளையும் ஏனைய தமிழ் மாவட்டங்களில் கணிசமான வாக்குகளையும் பெற்ற பக்கம் 02

## ஐ.தே.கட்சிக்கும் தேசியப் பட்டியலில் ஒரே ஒரு இடம்

இலங்கை முழுவதிலும் எந்த மாவட்டத்திலும் ஓர் ஆசனத்தைக் கூட பெறாத ஐ.தே. கட்சிக்கு ஆறுதல் பரிசு போல தேசியப்பட்டியலில் ஓரிடம் கிடைத்திருக்கின்றது.

## 2020 நாடாளுமன்றத் தேர்தல் கட்சிகளின் நிலைமை

| | |
|---|---|
| பொதுஜன பெரமுன | - 145 (17 தேசியப் பட்டியலுடன்) |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 54 (07 தேசியப் பட்டியலுடன்) |
| இலங்கைத் தமிழரசு | - 10 (01 தேசியப் பட்டியலுடன்) |
| தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) | -03 (01 தேசியப் பட்டியலுடன்) |
| அ.இ.த. காங்கிரஸ் | - 02 (01 தேசியப் பட்டியலுடன்) |
| ஈ.பி.டி.பி. | - 02 |
| ஸ்ரீ. மு. காங்கிரஸ் | - 01 |
| த.ம.வி.புலிகள் | - 01 |
| அ.இ.மு.காங்கிரஸ் | - 01 |
| தமிழ் மக்கள் தேசிய கூ. | - 01 |
| சு.கட்சி | - 01 |
| ஐ.தே.க. | - 01 (01 தேசியப் பட்டியலுடன்) |
| மற்றைய மூன்று கட்சிகள் | - 03 |

## யாழ் தேர்தல் மாவட்ட முடிவு

| | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி. | 1,12,967 | 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 55,303 | 01 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | 49,373 | 01 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | 45,797 | 01 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 35,927 | 01 |
| மொத்த வாக்குகள் | 3,94,136 | |
| செல்லுபடியான வாக்குகள் | 3,59,130 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 35,006 | |

## வன்னியிலும் கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள் மட்டுமே!

### ஈ.பி.டி.பிக்கு ஓர் ஆசனம்

வன்னி மாவட்டத்தில் கடந்த முறை 4 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இம்முறை 69 ஆயிரத்து 916 வாக்குகளுடன் 3 ஆசனங்களையே பெற்றுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 42 ஆயிரத்து 524 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய மக்கள் பக்கம் 02

## மோடி மஹிந்தவுக்கு வாழ்த்து

பொதுத்தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னிலை வகிக்கும் நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். பக்கம் 02

## மட்டக்களப்பிலும் தமிழரசுக்கு இரண்டு ஆசனங்கள் மட்டுமே!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த முறை 3 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), இம்முறை 79 ஆயிரத்து 460 வாக்குகளுடன் 2 ஆசனங்களையே பெற்றுள்ளது.

இதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“அன்ட்ரோயிட் போன்’ வைத்திருந்தவர் எல்லாம் தத்தமது எண்ணப்படி கற்பனைக் குதிரைகளைத் தட்டிவிட்டுக் கதைகளை அவிழ்த்து விட அதனால் தேவையற்ற குழப்பங்கள்.

படுத்திருந்து ரூம் போட்டு யோசித்து ஐடியா கண்டு பிடிப்பார்கள் போலும். புதுசு புதுசா ஒவ்வொன்றாக அவிழ்த்து விடுகிறார்கள்.

நேற்றிரவு பல வாக்களிப்பு நிலையங்களுக்குரிய விருப்பு வாக்குகள் எண்ணப்பட முன்னரே அவர் இன்’ இவர் அவுட்’ என்று செய்திகள் பறந்தன. இறுதியில் முடிவுகள்மாறிவர,பெரும்குழப்பம்உருவாகின.

முதலில் ‘ஸ்ரீதரன், சசிகலா, சித்தர்’ என்று செய்திகள் முகப் புத்தகத்தில் பறந்தன. பின்னர் சற்று நேரம் கழித்து ‘சித்தர் அவுட், சுமந்திரன் இன்!’ என்றார்கள். இன்னொரு கொஞ்ச நேரம் கழித்து ‘ஸ்ரீதரன், சுமந்திரன், சித்தர்’என்று முகப்புத்தகத்தில் மீண்டும் புதுச் செய்திகள் பறந்தன.

இந்த முகப் புத்தக ஹீரோக்களுக்கு இப்படி எல்லாம் செய்தி கொடுத்தவர்கள் யார் என்று தெரியாது. ஆனால் எல்லோரும் அந்த முகப்புத்தக ஹீரோக்களின் கயிற்றை முழுமையாக விழுங்கினார்கள் என்பதுதான் உண்மை.

*“பார்த்தாயா முதலில் சித்தர் பெயர் இருந்தது. இப்போது வெட்டிவிட்டு சுமந்திரன் பெயர் சேர்த்துவிட்டார்கள். கள்ளர்கள்”* – என்று ஒருவர் திட்டினார்.

*“பார்த்தாயா இப்போது சசிகலாவை வெட்டி விட்டு சித்தரைச் சேர்த்துக் கொண்டு விட்டார்கள். பொறுக்கிகள்...!”* – என்று இன்னொரு பிரகிருதி பாய்வார்.

பிறகென்ன ரகளை வெடிக்கும்....?

இன்று அதிகாலை யாழ்.மத்திய கல்லூரியில் இதுதான் நடந்தது.

முகப்புத்தகப் பிரகிருதிகள் கிளப்பிவிட்ட குழப்பத்தை அங்கு திரண்டிருந்த மற்றொரு கட்சியின் திருவாலி’ கூட்டங்கள் களேபரமாக்கின.

வசதியாய்ப் போய்விட்டது – கூட்டமைப்பைப் போட்டுத் தாக்க...!

–மின்னல்–

## சிறீதரன்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை விருப்பு வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்ற போது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் விருப்பு வாக்குகளில் முன்னிலை வகிக்கும் வேட்பாளர்கள் யார் என்பது குறித்தக் குழப்பகரமான செய்திகள் மாறி மாறி வெளியில் பேசப்பட்ட வண்ணம் இருந்தது.

ஒரு சமயம் சுமந்திரன் அவுட் என்று ஒரு தகவல் பரவியது. பிறிதொரு சமயம் அவர் தெரிவாகின்றார் என ஒரு தகவல் வெளியானது.

இத்தகைய முரண்பாடான தகவல்களைச் சாதகமாகப் பயன்படுத்தி அங்கு திரண்டிருந்த கும்பல் ஒன்று ரகளை செய்ய முயன்றது.

அச்சமயத்தில் அங்கு வந்த சுமந்திரன் வாக்கெண்ணும் மத்திய நிலையத்துக்குள் நுழைந்தார். அவர் உள்ளே நுழைந்த சமயம் அவர் சென்ற திசைக்கு செருப்பும்,தண்ணீர்ப் போத்தலும் வீசப்பட்டன. இதனையடுத்து களேபரம் ஏற்பட்டது.

சத்தமிட்டுக் குழப்பி, ரகளை செய்த கூட்டத்தினரைக் கலைப்பதற்கு அங்கு கடமையில் இருந்த விசேட அதிரடிப்படையி னர் அடிதடி நடத்தினர். அந்தக் கூட்டத்தில் நின்றிருந்த மாவையின் மகன் உட்பட பலருக்கு அடி வீழ்ந்தது.

அதிகாலை 1.30 மணிக்கு ரகளை முடிந்து சுமார் ஒன்றரை மணிநேரம் கழித்து 3.00 மணி அளவில் யாழ். மாவட்டத் தேர்தல் முடிவுகளை யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசன் அறிவித்தார். (உ)

## காங்கிரஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு அதன் மூலம் தேசியப் பட்டியலில் ஓர் அங்கத்துவம் கிடைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து ஒருவர் அக் கட்சிக்குத் தெரிவாகின்றமையால் அக் கட்சிக்கு இம்முறை 2 இடங்கள் கிடைத்துள்ளன. (உ)

# நாடாளுமன்றத் தேர்தலில் ‘மொட்டு’ அமோக வெற்றி

## மொத்தம் 145ஆசனங்கள் வசம்

இலங்கையின் 09ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றி ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

நாடு முழுவதும் அதிகளவான தொகுதிகளைக் கைப்பற்றியுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி 128 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி 47 ஆசனங்களைக் கைப்பற்றி இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 09 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பன தலா 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன தலா ஒவ்வொரு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

இதேவேளை, 29 தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் 17 உறுப்பினர்களை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன், 7 தேசியப் பட்டியல் உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு தேசியப் பட்டியலில் தலா ஓர் ஆசனம் வீதமும் வழங்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி 67 ஆயிரத்து 692 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைத் தனதாக்கியுள்ளது. அந்த இடத்துக்கு தற்போது விளக்கமறியலில் இருக்கும் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) தெரிவாவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 34 ஆயிரத்து 428 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது.

இதனிடையே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் 33 ஆயிரத்து 424 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைத் தனதாக்கியுள்ளது. அந்த இடத்துக்கு வியாழேந்திரன் தெரிவாவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வன்னியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி 37 ஆயிரத்து 883 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றுள்ளது.

இதனிடையே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 11 ஆயிரத்து 308 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைத் தனதாக்கியுள்ளது.

## மோடி மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசி அழைப்பின் ஊடாக இந்தியப் பிரதமர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

மேலும் இலங்கை மக்களின் வலுவான ஆதரவோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு இந்தியாவுடன் நெருக்கமாக பணியாற்றத் தான் தயாராக இருக்கின்றார் எனவும் மஹிந்த ராஜபக்ஷ அதில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாண மாவட்டத்தில் விருப்பு வாக்குகள் விவரம்

| | |
|---|---|
| **இலங்கை தமிழரசுக் கட்சி** | |
| சிவஞானம் சிறிதரன் | 35,884 |
| மதியாபரணம் சுமந்திரன் | 27,834 |
| தர்மலிங்கம் சித்தார்த்தன் | 23,840 |
| சசிகலா ரவிராஜ் | 23,098 |
| ஈஸ்வரபாதம் சரவணபவன் | 20,392 |
| மாவை சேனாதிராஜா | 20,358 |
| பாலச்சந்திரன் கஜதீபன் | 19,058 |
| இமானுவேல் ஆனோல்ட் | 15,386 |
| குருசாமி சுரேந்திரன் | 10,917 |
| வேதநாயகம் தபேந்திரன் | 5,952 |
| **அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்** | |
| கஜேந்திரகுமார் பொன்னம்பலம் | 31,658 |
| செல்வராசா கஜேந்திரன் | 24,794 |
| விஸ்வலிங்கம் மணிவண்ணன் | 22,741 |
| கனகரத்தினம் சுகாஷ் | 21,463 |
| **ஈழமக்கள் ஜனநாயக கட்சி** | |
| டக்ளஸ் தேவானந்தா | 32,156 |
| முடியப்பு ரெமிடியஸ் | 10,780 |
| ஐயாத்துறை சிறிரங்கேஸ்வரன் | 10,545 |
| **தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி** | |
| விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் | 21,554 |
| கந்தையா அருந்தவபாலன் | 12,674 |
| கனகலிங்கம் சிவாஜிலிங்கம் | 10,121 |
| அனந்தி சசிதரன் | 9,193 |
| சுரேஷ் பிரேமசந்திரன் | 7,756 |
| நல்லதம்பி சிறிகாந்தா | 3,702 |
| **ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி** | |
| அங்கஜன் இராமநாதன் | 36,895 |



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேர்தல் தரும் பாடங்கள்

வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமல்ல, தெற்கிலும் அதிர்ச்சி தரும் தேர்தல் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் வாக்காளர்கள் 'சூடு' கொடுத்து பின்னடைவு ஏற்படுத்தினார்கள் என்றால், கூட்டமைப்புக் கொடுத்த முண்டில் கடந்த நவம்பர் வரை அரசு அமைத்திருந்த ரணில் தரப்புக்கு –ஐ.தே.கட்சிக்கு – தென்னிலங்கை வாக்காளர்கள் வேட்டே வைத்துவிட்டிருக்கின்றார்கள்.

கடந்த நவம்பர் ஜனாதிபதித் தேர்தல் வரை நாட்டில் அரசு அமைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி இலங்கை முழுவதிலும் ஓர் ஆசனம் கூடக் கிடைக்காத இக்கட்டு நிலைக்குச் செல்லும் என்ற நிலைமை தான் நேற்றிரவு இப்பத்தி எழுதும் போது இருந்தது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை எட்டுவதற்கான இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாலும், அதை எட்டுவதற்கு ஏழு, எட்டு இடங்கள் குறைவாகவே அதற்குக் கிட்டும் என்று நேற்று முன்னிரவுத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த வெற்றி – இத்தகைய பெறுபேறு – ராஜபக்ஷக்களுக்குப் புதியதல்ல. 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்த பின்னர், 2010 ஏப்ரலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தல் நடத்தியபோதும், இதேபோன்று 140 ஆசனங்களையும் கடந்த வெற்றி ஒன்று அவருக்குக் கிடைத்தது. அதை வைத்துக் கொண்டுதான் அவர் அப்போதைய 17ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கி, தமக்குச் சார்பான வகையில் 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்.

இந்தத் தடவையும் தற்போது நடைமுறையில் இருக்கும் 19ஆவது திருத்தத்தை நீக்கிப் புதிய ஏற்பாட்டைச் செய்வதற்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை – 150 எம்.பிக்களின் – ஆதரவைத் திரட்டுவது அவருக்கு ஒன்றும் பெரிய சங்கடத்துக்குரிய விவகாரமாக இருக்கப் போவதில்லை.

இந்தத் தடவை பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி 60 முதல் 65 ஆசனங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது 2010 பொதுத் தேர்தலில் ரணில் தலைமையிலான ஐ.தே. கட்சி பெற்ற எண்ணிக்கைக்குச் சமனாகும்.

ஆனாலும் இந்தத் தடவை சஜித் தரப்புப் பெற்ற தேர்தல் முடிவை தென்னிலங்கை நோக்கர்கள் – அரசியல் அவதானிகள் – சிலாகிக்கின்றனர்.

2016ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை – மொட்டுக் கட்சியை – ராஜபக்ஷக்கள் ஆரம்பித்தனர். 2018 இல் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திப்பதற்கு முன்னர் தமது புதிய கட்சியைத் தயார் செய்வதற்கு அவர்களுக்கு ஒன்றரை வருடங்களுக்கு மேல் கால அவகாசம் இருந்தது.

ஆனால், சஜித்துக்கோ புதிய கட்சி தொடங்கிய கையோடே தேர்தலை சந்திக்க வேண்டிய நிலைமை. அதற்குள் கொரோனாப் பேரிடர் நெருக்கடி வேறு.

இதற்கு நடுவிலும் அவர் இத்தகைய தேர்தல் பெறுபேறைப் பெற்றமை பாராட்டத்தக்கது என்பது நோக்கர்களின் கணிப்பு.

இந்தத் தேர்தல் வடக்கிலும் நமது தலைவர்களுக்கு சில பாடங்களைக் கற்பிக்கத் தவறவில்லை.

குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வாக்கு வங்கியில் கணிசமான அளவை இழந்திருக்கின்றது.

அக்கட்சியின் தலைவர் யாழ்ப்பாணத்திலும், செயலாளர் மட்டக்களப்பிலும் பெரும் பின்டைவைச் சந்தித்திருக்கின்றார்கள்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தனர் என நேற்றிரவு முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தமிழரசு, கூட்டமைப்புத் தலைவர்கள் சற்று விலகி, அடுத்த தலைமுறையிடம் கட்சியைக் கையளிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது என்ற செய்தியையே இந்த முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன என்று நாம் கருதுகின்றோம்.

தமிழரின் தேசியக் கோரிக்கையை கொதி நிலையில் வைத்து, அதற்காக உயிர்ப்புள்ள வகையில் உணர்வுபூர்வமாகக் போராடக் கூடிய தகைமையுடையவர்களின் கைகளுக்குத் தமிழரசும், கூட்டமைப்பும் செல்லாவிட்டால் அவற்றின் எதிர்காலம் மேலும் மங்கி, மறையும் நிலையே ஏற்படும்.

பல தரப்பினரையும் அரவணைத்து, புதிய உத்வேகத்துடன் முன் நகர்த்தக் கூடிய அடுத்த தலைமுறையின் கைகளுக்கு கட்சியை வழி நடத்தும் பொறுப்பைக் கையளிப்பதே கட்சியை மீட்சியுற வைக்கும் ஒரே வழியாகும்.

# பிரான்ஸின் தெற்குக் கடற்பகுதியில் அலையில் சிக்கி தமிழ் மாணவி பலி



பிரான்ஸில் ஈழத்தமிழ் பூர்வீகம் கொண்ட 19வயதுடைய மாணவி ஒருத்தி கொந்தளிப்பு மிக்க கடற்பகுதிக்குள் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்திருக்கிறார்.

பிரான்ஸில் தற்போதைய கோடை விடுமுறைக்காலத்தில் கடற்கரைகள் உட்பட நீர் நிலைகளில் குளிப்பவர்கள், நீந்துபவர்கள் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடியை அடுத்து நீச்சல் தடாகங்கள் இன்னமும் முழுமையாகத் திறக்கப்படாததால் நீந்துவதற்காகப் பலரும் – குறிப்பாக இள வயதினர் – கடற்கரைகளுக்குப் படையெடுக்கின்றனர் என்று கூறப்படுகிறது

கடந்த சில நாள்களில் நாட்டின் தெற்கு கடல் பகுதி உட்பட ஏரிகள், நீச்சல் தடாகங்கள், நதிகளில் நீரில் மூழ்கி பல உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன. இதனை அடுத்தே நாட்டின் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழ் பூர்வீகம் கொண்ட இளையோர் ஐவர் பிரான்ஸின் தெற்கு கரைப்பகுதியில் Plage de la Marenda கடலில் குளிக்கச் சென்ற சமயம் அவர்களில் மூவர் அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட சம்பவம் கடந்த திங்களன்றுமாலை இடம்பெற்றுள்ளது.

இந்த மூவரில் 19வயதுடைய மாணவி ஒருத்தி கொந்தளிப்பு மிக்க கடற்பகுதிக்குள் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்திருக்கிறார். அதே வயதுடைய அவரது நண்பர்கள் இருவர் ஒருவாறு நீந்தித் தப்பி மயக்கமுறும் நிலையில் கரையொதுங்கியிருக்கின்றனர். அவர்கள் இருவரும் பின்னர் அவசர மீட்புப் படையினரால் காப்பாற்றப்பட்டு Perpignan மத்திய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கடலில் காணாமற் போன யுவதியை தேடும் பணிகள் பல மணிநேரமாக நீடித்தன. உயிர் காப்பு ஹெலிக்கொப்டரின் உதவியுடன் சுழியோடிகள் நடத்திய தேடுதலை அடுத்து யுவதியின் உடல் அன்றிரவு 10 மணியளவில் கடலில் இருந்து மீட்கப்பட்டது.

பாரிஸின் புறநகரான லாகூர்நெவ் பகுதியில் வசிக்கும் அனித்ரா ரஞ்சன் என்ற பல்கலைக்கழக புகுமுக மாணவியே உயிரிழந்தவர் ஆவார்.

ஸ்பெயின் நாட்டு எல்லையோரமாக உள்ள Canet-en-Roussillon கரையில் இவர்கள் நீந்திய Plage de la Marenda கடற்பகுதியில் அன்று மாலை கடும் காற்றுடன் கூடிய கொந் தளிப்பு நிலைமை காணப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜொந்தாம் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இனிமேல் நவீன துப்பாக்கிகள்!

கொழும்பு, ஓக.07

உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நவீன துப்பாக்கிகளை வழங்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் மில்லி மீற்றர் - 09 ரக கைத்துப்பாக்கிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை, மகசின், கொழும்பு தடுப்புக்காவல், நீர்கொழும்பு, பூஸா மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ ஆகிய சிறைச்சாலைகளின் அதிகாரிகள் மற்றும் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு இந்தத் துப்பாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு துப்பாக்கிகளைப் பெற்றுக் கொள்ளும் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

# நகர சபைத் தலைவர், ஆணையாளர் உட்பட 5 பேரைக் கைது செய்யுமாறு அறிவுறுத்தல்!

குருநாகல் நகர சபைத் தலைவர் மற்றும் ஆணையாளர் உள்ளிட்ட 5 பேரைப் பிடியாணையைப் பெற்று கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குருநாகல் நகரில் அமைந்துள்ள புவனேகபாகு மன்னர் காலத்து கட்டடம் ஒன்றுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபரால் பொலிஸ்மா அதிபருக்கு மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரியான அரச சட்டவாதி நிஷாரா ஜயரட்ண இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

# முல்லைத்தீவில் சிறுமியை வன்புணர்ந்த மதகுருவுக்கு 17 வருடக் கடூழியச் சிறை

முல்லைத்தீவு, ஓக. 07

முல்லைத்தீவு, உடையார்கட்டு பகுதியில் மதகுருவின் வீட்டில் கற்பதற்காகத் தங்கியிருந்த சிறுமியை வன்புணர்ந்த குற்றத்துக்காக மதகுருவுக்கு 17 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மீள்குடியேற்றத்தின்போது உடையார்கட்டுப் பகுதியில் குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்த 17 வயது சிறுமி தனது உயர்தர வகுப்பைக் கற்பதற்காக உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்திருந்தார். இதன்போது தங்கி நின்று கற்பதற்காக இடப்பெயர்வின் போது செட்டிகுளம் முகாமில் அறிமுகமான மதகுருவின் வீட்டை ஒழுங்குபடுத்தியிருக்கின்றனர். இந்நிலையில் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறுமியை அந்தமதகுரு துஷ்பிரயோகத்துக் குட்படுத்தியுள்ளார்.

5 பெண் பிள்ளைகளின் தந்தையான 48 வயது மதகுரு தனது வீட்டில் தங்கியிருந்த சிறுமியை வன்புணர்ந்த குற்றத்துக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப் பகிர்வு பத்திரம் 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வவுனியா மேல் நீதிமன்றத்தால் விசாரணைகள் இடம்பெற்று கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மதகுருவாக இருந்தும் தன்னைவிட வயது குறைந்த பாதிக்கப்பட்ட பிள்ளையின் சம்மதத்தின் பெயரில் இந்த வன்புணர்வு சம்பவம் இடம்பெற்றது எனக் கூறித் தனது சாட்சியத்தில் குறித்த குற்ற சம்பவம் இடம்பெற்றதை உறுதிப்படுத்தியதன் அடிப்படையில் குற்றவாளியாகக் காணப்பட்ட மதகுருவுக்கு 17 வருட கடூழிய சிறைத்தண்டனையும், 5000 ரூபா தண்டப்பணமும்விதிக்கப்பட்டது.

அதேவேளை, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 3 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டில் பத்தில் ஒரு பங்கு சக்தி பெய்ரூட் வெடிப்பில்!

## சுங்க அதிகாரிகள் காட்டிய அலட்சியத்தால் சிதைந்து போன லெபனானின் தலைநகரம்





பெய்ரூட் வெடி விபத்தை ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணு குண்டு சக்தியில் பத்தில் ஒரு பங்கு இருக்கலாம் என்றும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

லெபனானில் நேற்று முன்தினம் இரவு அமோனியம் நைட்ரேட் சேமித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கு வெடித்ததில் 138 பேர் பலியாகியுள்ளனர். நான்காயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இந்த நிலையில், அமோனியம் நைட்ரேட் வெடித்துச் சிதறியது குறித்து பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஜோர்ஜியாவிலிருந்து மொசாம்பிக் நாட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு கப்பல் பெய்ரூட்டுக்கு வந்துள்ளது. கப்பலில் அமோனியம் நைட்ரேட் இருந்துள்ளது. இது தனியார் நிறுவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக கப்பலைப் பறிமுதல் செய்த அதிகாரிகள் அதிலிருந்த 2750 கிலோ தொன் எடை கொண்ட அமோனியம் நைட்ரேட்டை துறைமுகப் பகுதியிலுள்ள 12 ஆம் எண் கிட்டங்கியில் சேமித்து வைத்துள்ளனர்.

அமோனியம் நைட்ரேட்டை அகற்றுவது குறித்து சுங்க அதிகாரிகள் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் லெபனான் நீதித்துறைக்கு 6 முறை கடிதம் எழுதியுள்ளனர். அதில், அமோனியம் நைட்ரேட் அடங்கிய மூடைகளை அகற்ற உதவும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால், நீதித்துறையிலிருந்து முறையான பதில் எதுவும் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட 7 ஆண்டுகளாக ஒரே இடத்தில் குவித்து வைக்கப்பட்டதால் அறைக்குள் அதிக அளவு வெப்பம் உருவாகி அமோனிய நைட்ரேட் மூட்டைகள் வெடித்துச் சிதறியுள்ளன.

சாதாரண அறை வெப்பநிலையில் உள்ள சுத்தமான அமோனியம் நைட்ரேட் ஆபத்தானது அல்ல. ஆனால், 32.2 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெப்ப நிலை நிலவினால் அது ஆபத்தானதாக மாற வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். ஒரே இடத்தில் பல ஆண்டுகளாக சேமித்து வைத்திருந்ததோடு துறைமுகத்தில் மற்றொரு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக அமோனியம் நைட்ரேட் சேமித்து வைக்கப்பட்டிருந்து கிட்டங்கியில் எண் 12 இல் 170 டிகிரி செல்சியஸ் வரை வெப்ப நிலை உருவாகியிருந்தாக சொல்லப்படுகிறது. இந்த அதீத வெப்பமே பெய்ரூட் நகரம் சிதைந்து போக முக்கியக் காரணமாக அமைந்துவிட்டது. வெடி விபத்தால் கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர் சுற்றளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அலட்சியமாக செயல்பட்ட துறைமுக அதிகாரிகளை வீட்டுச்சிறையில் வைக்க லெபனான் அரசு உத்தரவிட்டுள்ளது.

அமோனியம் நைட்ரேட் என்பது ஒரு வெள்ளைப் படிக உப்பு ஆகும். உரம் தயாரிக்கவும் அம்மோனியம் நைட்ரேட் பயன்படுத்தப்படுகிறது. குவாரிகள், சுரங்கங்களில் இணை பொருள்களுடன் சேர்த்து வெடிபொருளாகவும் பயன்படுகிறது.

வெடிகுண்டுகளைத் தயாரிக்கவும் அமோனியம் நைட்ரேட் பயன்படுத்தப்படுகிறது. ஐரிஸ் விடுதலை இராணுவம் அமோனியம் நைட்ரேட்டை பயன்படுத்தி வெடிகுண்டுகளை தயாரித்ததாகவும் தகவல் உள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு தாய்லாந்தின் பாலி தீவில் இரவு விடுதிகளில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டது. இதில், 200 பேர் பலியாகினர். இந்த குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளில் அமோனியம் நைட்ரேட் பயன்படுத்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## 7 லட்சம் பேரைக் காவு கொண்டது கொரோனா இதுவரை ஒரு கோடி 21 லட்சம் பேர் மீண்டனர்



ஜெனீவா,ஓக.07

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை ஒரு கோடியே 21 லட்சம் பேர் மீண்டுள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 213 நாடுகள் / பிரதேசங்களுக்கு பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்தக் கொடிய வைரஸுக்குத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் இறுதி கட்ட முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெற்று வந்தாலும் மருத்துவத்துறையினரின் தன்னலமற்ற சேவையால் வைரஸ் பாதிப்பில் இருந்து பலர் மீண்டு வந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியே 21 லட்சத்தை கடந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, 1 கோடியே 89 லட்சத்து 56 ஆயிரத்து 830 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 61 லட்சத்து 4 ஆயிரத்து 823 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 65 ஆயிரத்து 514 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா தாக்குதலுக்கு இதுவரை 7 லட்சத்து 10 ஆயிரத்து 49 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனாலும், உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 1 கோடியே 21 லட்சத்து 41 ஆயிரத்து 958 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளனர்.

கொரோனாவில் இருந்து அதிக எண்ணிக்கையில் குணமடைந்த வர்களை கொண்ட நாடுகள்:-

அமெரிக்கா - 25,29,952
பிரேசில் - 20,20,637
இந்தியா - 12,82,215
ரஷியா - 6,69,026
தென் ஆப்ரிக்கா - 3,77,266
சிலி - 3,38,291
பெரு - 3,02,457
மெக்சிகோ - 3,00,254

## 'எல்லாத் தேவதைகளுக்கும் இறக்கைகள் இருப்பதில்லை!' வைரலாக பரவும் லெபனான் பெய்ரூட் தாதியின் புகைப்படம்

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்த வெடி விபத்தில் 138 பேர் பலியாகியுள்ளனர். விபத்தில் சிக்கி 4. 000 பேருக்கும் மேலானவர்கள் காயமடைந்துள்ளனர். வெடி விபத்து நிகழ்ந்த பெய்ரூட் துறைமுகத்தின் அருகிலுள்ள அஷ்ரஃபியா என்ற இடத்தில் இருந்த ஆரோம் மருத்துவமனையும் பலத்த சேதமடைந்தது.

மருத்துவமனையில் பணியாற்றிய 4 தாதியர்கள் பலியாகினர். 200 நோயாளிகள் காயமடைந்தனர். வெடி விபத்தின் போது, மருத்துவமனையில் பணி புரிந்த தாதி ஒருவர் கையில் மூன்று பச்சிளம் குழந்தைகளை வைத்து கொண்டு உடைந்து சிதறிய ஜன்னல் அருகே நின்று போனில் பேசுவது போன்ற படத்தை பிலால் மெரி ஜெவீஸ் என்ற போட்டோகிராபர் எடுத்தார்.

தன் முகப் புத்தகஃ பக்கத்தில் இந்த புகைப்படத்தை வெளியிட்ட பிலால் மெரி ஜெவீஸ், "என் வாழ்க்கையில் இப்படி ஒரு கொடூரமான சம்பவத்தை பார்த்ததில்லை. இந்த நர்ஸ் தன் கையில் மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு யாருடனோ போனில் பேச முயற்சித்தார். என் 16 வருட கால புகைப்பட அனுபவத்தில் போர்க்களத்தில் கூட இது போன்ற காட்சியை காணவில்லை" என்று குறிப்பிட்டிருந்தார்.




இந்த நிலையில் குழந்தைகளைக் காப்பாற்றிய தாதியின் புகைப்படம் வைரலாக பரவத் தொடங்கியுள்ளது. உலக மக்கள் அந்தத் தாதிக்குப் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். 'எல்லா ஏஞ்சல்களுக்கும் (தேவதைகளுக்கும்) இறக்கைகள் இருப்பதில்லை' என்றும் 'இந்த இக்கட்டான தருணத்திலும் இந்த நர்ஸால் எப்படி இவ்வளவு திறமையுடன் செயல்பட முடிந்தது?' எனவும் 'மக்கள் கொரோனா என்ற கொடியவனிடம் சிக்கி தவிக்கும் இந்த ஆண்டில் சுகாதாரப் பணியாளர்கள்தான் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றனர் என்றும் பாராட்டு குவிந்து வருகிறது.

## டோக்கியோ விரிகுடாவில் இருந்து ஒலிம்பிக் நினைவுச்சின்னம் அகற்றம்

ஜப்பானின் டோக்கியோ விரிகுடாவில் நிறுவப்பட்டிருந்த ஒலிம்பிக் வளையங்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டன. டோக்கியோவில் நடக்க இருந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஏழு மாதங்களுக்கு முன்பு 50 அடி உயரம் மற்றும் 107 அடி அகலத்தில் டோக்கியோ விரிகுடாவில் நிறுவப்பட்ட ஒலிம்பிக் நினைவுச் சின்னம், பராமரிப்பு பணிக்காக தற்காலிகமாக அகற்றப்பட்டுள்ளது. இது டிசம்பர் மாதம் மீண்டும் நிறுவப்படும் என்று டோக்கியோ பெருநகர திட்ட இயக்குநர் அட்சுஷி யனாஷிமிஜு தெரிவித்துள்ளார்.

# குஜராத்தில் கொரோனா ஆஸ்பத்திரியில் திடீர் தீவிபத்து; நோயாளிகள் 8 பேர் பலி

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கொரோனா மருத்துவமனையில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் சிக்கி நோயாளிகள் 8 பேர் பலியாகினர்.



அகமதாபாத் அடுத்த நவ்ரங் புரா பகுதியில் செயல்பட்டு வரும் ஷ்ரேய் மருத்துவமனையில், கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்று அதிகாலையில் அந்தமருத்துவமனையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிக்கி, ஐசியு பிரிவில்சிகிச்சைபெற்றுவந்தகொரோனா நோயாளிகள் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 40க்கும் மேற்பட்ட நோயாளிகள் அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனிடையே தீவிபத்து குறித்து முதலமைச்சர் விஜய் ரூபானியிடம் பேசினார் எனக் குறிப்பிட்டும் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்தும் பிரதமர் மோடி ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

# காஷ்மீர் விடயத்தில் பாக். முயற்சி மீண்டும் தோல்வியைத் தழுவியது



காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்கும் பாகிஸ்தானின் முயற்சி மீண்டும் தோல்வியைத் தழுவி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் ஆலோசனைக் கூட்டம் மூடிய அறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில், ஜம்மு – காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட விவகாரத்தை பாகிஸ்தான் எழுப்பியுள்ளது.

ஆனால், நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ரஷியா உட்பட பெரும்பாலான நாடுகள், இந்தியா வலியுறுத்தியதின்படி இந்தப் பிரச்சினையை இருநாடுகளும் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தி உள்ளது.

மேலும், இந்த விவகாரத்தில் கவுன்ஸில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என கூறப்பட்டதாகவும், ஐ.நா.விற்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திருமூர்த்தி தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# மகாராஷ்டிராவில் கொட்டிய கனமழை சற்றே குறைந்தது

தொடர் கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மகாராஷ்டிராவில், நேற்று மழை பாதிப்பு சற்றே குறைந்துள்ளது.

கடந்த 3 நாள்களாக மும்பை, தானே உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டித் தீர்த்து வந்தது. தாழ்வான பகுதிகளில்மழைநீர் தேங்கியதால், பல இடங்களும் வெள்ளக்காடாக காட்சியளித்தன. இந்நிலையில் நேற்று அதிகாலை முதல் மராட்டியத்தில் மழை பாதிப்பு சற்றே குறைய தொடங்கியுள்ளது.

ரத்னகிரி, சிந்துதுர்க், புனே, கோலாபூர், சதாரா மாவட்டங்களுக்கு ஒரேஞ்ச்வண்ண மழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் மும்பை, தானே, பால்கர், வடக்கு கொங்கன் பகுதிகளில் விட்டு விட்டுக் கனமழை பெய்யும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மும்பையில் தற்போது வரை சராசரி அளவை கடந்து 231 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள் ளது.

மழைவெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளில், தேசிய



பேரி டர் மீட்பு படையின் 15 குழுக்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தானே அருகிலுள்ள உப்வான் ஏரி நிரம்பி வழிவதால், அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது


# காஷ்மீர் பிரச்சினையில் சீனாவின் கருத்துக்கு இந்தியா பதிலடி

காஷ்மீர்பிரச்சினை இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் என்றும், அதனைப் பற்றி சீனா அக்கறை கொள்ளத் தேவையில்லை என்றும் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களைச் சந்தித்த அனுராக் ஸ்ரீவஸ்தவா, மற்ற நாடுகளின் உள் விவகாரங்கள் குறித்து சீனாவை எந்தக் கருத்தையும் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

முன்னதாக பேசிய சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங்வின்பின், காஷ்மீர் பகுதியில் நிலவி வரும் சூழ்நிலையை சீனா உன்னிப்பாகக் கவனித்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்த பிரச்சினையில் இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அயோத்தி ராமர் கோவில் கட்டுமானத்திற்கு ரூ. 18.61 கோடி திரட்டிய ஆன்மிக தலைவர்



ராமர் கோவில் கட்டுமானத்திற்காக, குஜராத்தை சேர்ந்த, ஆன்மிக தலைவர், மொராரி பாப்பு, உலகம் முழுவதிலும் உள்ள தன் ஆதரவாளர்களிடம் இருந்து, 18.61 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) நிதி திரட்டி உள்ளார்.

குஜராத்தை சேர்ந்தவர், மொராரி பாப்பு. ஆன்மிக தலைவரான இவர், தன், 14 ஆவது வயதில் இருந்து, இராமாயண சொற்பொழிவு ஆற்றி வருகிறார். இவருக்கு, உலகம் முழுதும், ஆதரவாளர்கள் உள்ளனர். ராமஜென்ம பூமி விவகாரத்தில், 'ராமர் ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டும் சொந்தமானவரல்லர். அவர், ஒட்டு மொத்த உலகுக்கும் சொந்தமானவர்' என்ற கருத்தை வலியுறுத்தினார்.


அயோத்தியில், ராமர் கோவில் கட்டுமானத்திற்கு ரூ.18.61 கோடி நிதித்திட்ட, 5 கோடி ரூபாய் நிதி அளிக்க விரும்புகிறார் எனத்தெரிவித்த மொராரி பாப்பு, உலகம் முழுவதும் உள்ள, தன் ஆதரவாளர்களிடம், நிதி திரட்ட துவங்கினார். இந்தியாவில் இருந்து, 11.30 கோடி ரூபாய் நிதி திரண்டது. அதை, ராம ஜென்மபூமி தீர்த்த தேரர் அறக்கட்டளையின் வங்கி கணக்கில், நேற்று ஒப்படைத் தார்.

மேலும், ஐரோப்பிய நாடான, பிரிட்டனில் இருந்து, 3.21கோடி ரூபாவும், அமெரிக்கா, கனடா மற்றும் இதர நாடுகளில் இருந்து, 4.10 கோடி ரூபாவும் திரட்ப்பட்டது.

வெளிநாட்டு நன்கொடைகள் பெறுவதற்கான முறை யான அனுமதி கிடைத்த பிறகு, அந்த தொகை, அறக் கட்டளை வசம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஜம்மு – காஷ்மீர் ஆளுநராக மனோஜ் சின்ஹா நியமனம்

பா.ஜ.கவைச்சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் மனோஜ் சின்ஹா ஜம்மு – காஷ்மீரின் துணைநிலை ஆளுநராக நிய மிக்கப்பட்டுள்ளார்.



உத்தரபிரதேச மாநிலம் காசி பூரில் இருந்து மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்ட அவர் கடந்த நாடா ளுமன்ற தேர்தலில் தோல்வியுற்றார்.

இந்நிலையில், ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிர தேசத்தின் துணைநிலை ஆளுநராக மனோஜ் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பிறப்பித்துள்ளார்.

அப்பதவியை வகித்து வந்த கிரிஷ் முர்முவின் ராஜினாமாவை குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார். இதனிடையே, மத்திய அரசின் புதிய தலைமை தணிக்கை அதிகாரியாக கிரிஷ் முர்மு நியமிக்கப்பட உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# ஐ.நா.சபைக்கு இந்தியா ரூ.115 கோடி நிதி உதவி

## தூதர் திருமூர்த்தி வழங்கினார்




நியூயார்க்,ஓக.07

வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஐ.நா. சபையுடனான கூட்டு வளர்ச்சி நிதியாக 150 லட்சம் டொலர் (இந்தியப் பணமத்தில் 115 கோடி ரூபா) நிதிக்கான காசோலையை நியூயோர்க்கில் ஐ.நா. சபையின் தென் – தெற்கு ஒத்துழைப்புக்கான அலுவலகத்தில் அதன் இயக்குனர் ஜார்ஜ் செடீக் கிடம் இந்திய தூதர் டி.எஸ். திருமூர்த்தி நேரில் வழங்கினார்.

இதுபற்றி ஜார்ஜ் செடீக் கருத்து தெரிவிக்கையில், இந்தியா – ஐ.நா. நிதி அதன் ஆரம்ப ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பலன்களை அளித்துள்ளது. இந்த நிதியைத் தொடர்ந்து வளர்ப்பதற்கான இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட அர்ப் பணிப்பு, அதன் பயனுள்ள திட்டங்களின் தொகுப்பை காட்டுகிறது. மேலும், அதன் கூட்டாண்மையானது உண்மையான தென் – தெற்கு ஒற்றுமை மற்றும் உலகின் மிகவும் பாதிக்கப்படக் கூடிய சவால்களை எதிர்ப்பதில் இந்திய தலைமையின் ஐ.நா.சபைக்கான ஆதரவு ஆகியனவற்றை இந்தியாவின் ரூ.115 கோடி நிதி காட்டுகிறது என்றார்.

இதையொட்டி ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை, தென் நாடுகளிடையே ஒற்றுமைக்கான அழைப்பு, கொரோனா வைரஸ் தொற்று நோய் பின்னணியில் ஒரு பெரிய எதிரொலியை கண்டறிந்துள்ளது. உலகமெங்கும் உள்ள வளர்ந்து வரும் நாடுகள், பொது சுகாதாரம், வறுமை குறைப்பு மற்றும் சமூக நல்வாழ்வு ஆகி யவற்றில் அவர்கள் செய்த சாதனைகள், ஒரு பின்னடைவை தடுக்க போராடுகின் றன.

இந்த கட்டத்தில் பரஸ்பர ஆதரவு, ஒத்துழைப்பின் தேவை அதிகமாக உள்ளது. எப்போதும் இந்தப் பின்னணியில் இந்திய அரசு, சக வளரும் நாடுகளை அவர்களின் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளில் ஆதரிப்பதற்கான தனது உறுதியை புதுப்பித்துள்ளது எனக்கூறுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# கட்சி தொடங்கி குறுகிய காலத்தினுள் ஆட்சியைக் கைப்பற்றும் முதல் சாதனை



## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

ஓர் அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள், நாட்டின் ஆட்சி நிர்வா கத்தைக் கைப்பற்றும் முதலாவது தேர்தலாக நேற்றைய வாக்கெடுப்பு வரலாற்று ஏடுகளில் பதியப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்கள் கருத்துக் களை மதிக்கும் வகையில் கட்டியெழுப்பப்பட்ட கட்சியாகும். ஆட்சி அமைக்கப்பட்ட பின்னரும் அந்தக் கட்சி மக்களின் தேவைக்காக குரல் கொடுக்கும் என பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

கொரோனா நெருக்கடியைச்சமாளித்த விதத்தைப் போன்றே, நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கும் புதிய அரசாங்கத்தின் மூலம் தீர்வு காணப்படும்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகவும்மஹிந்த ராஜபக்ஷ வைப் பிரதமராகவும் கொண்ட ஆட்சி நிர்வாகத்தின் கீழ் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீண்டெழச் செய்யலாம் என அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றி உறுதி. மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை எதிர்பார்த்துள்ளோம். இலக்கு வெற்றிப்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது.- என்றும் அவர் கூறினார்.

சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை அனுசரித்துத் தேர்தலை மிகவும் சிறப்பாக நடத்தியமை தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் மக்களுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பஸில் ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலத்தில் நேற்று வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இந்தத் தகவல்களை பஸில் வெளியிட்டார்.

## கேகாலையில் இளைஞர் கத்தியால் குத்திக் கொலை

கேகாலை நகரத்திலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட மோதல் சம்பத்தில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கேகாலையைச் சேர்ந்த 24 வயதுடையவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களைக் கண்டறியும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

மேலும் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் 24 மணி நேரத்தில் 82 பேர் கைது!

நாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பொதுத் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் 18 வாகனங்களும் பறிமுதல் செய்யப் பட் டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் தேர்தல் தொடர்பாக மொத்தமாக 72 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேன ரட்ன தெரிவித்துள்ளார்.

அவற்றுள் 55 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாகவும் ஏனைய 17 முறைப்பாடுகள் சிறு சம்பவங்கள் தொடர்பாகவும் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்குப்பெட்டி கொண்டு சென்ற வாகனம் விபத்து; 2 பேர் காயம்

அம்பலாங்கொட – காலி சவுன் லன்ட்ஸ் கல்லூரியில் உள்ள வாக்கு எண்ணும் மத்திய நிலையத்திற்கு வாக்கு பெட்டிகளுடன் பயணித்த வான் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இருவர் காயமடைந்து, பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மீடியாகொட பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த வான் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் வாக்கு பெட்டிகள் மத்திய நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பாக மீடியாகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முகப் புத்தகத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை; ஏறத்தாழ 4316 முறைப்பாடுகள் கிடைத்தனவாம்

பொதுத் தேர்தல்களுக்காக சமூக ஊடகங்களை, குறிப்பாக முகப் புத்தகத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக ஏறத்தாழ 4,316 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து முகப் புத்தங்கள் சட்ட விரோத பிரசாரங்களை மேற் கொண்ட 60 நபர்கள் மற்றும் பக்கங்களை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், பொதுத் தேர் தல்களுக்கு முகப்புத் தகங்களைத் தவறாகப் பயன் படுத்தியதாக மொத்தம் 2000 முறைப்பாடுகள் ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் பெறப்பட்டிருந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் தினத்தன்று 143 தேர்தல் மீறல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொற்றுக்குள்ளான ஐந்து பேர் அடையாளம் காணப்பட்டனர்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான ஐவர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 839 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பிய இருவரும் சென்னையிலிருந்து திரும்பி வந்த ஒருவரும் சேனாபுர புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த இருவரும் உள்ளடங்குகின்றனர் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தற்போது கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைப் பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை 291 ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்த 13 பேர் நேற்று வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியிருந்தனர்.

இதனையடுத்து, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 537 ஆக உயர்ந்துள்ளது. அதேநேரம் கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் 68 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இந்த வைரஸ் காரணமாக இலங்கையில் இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இதுவரை 604 நபர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமையுடன், வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வருகை தந்த 939 பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது.

## வாக்கு எண்ணும் இடங்களில் பாதுகாப்புக்கு ஆபத்து இல்லை

### பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன கருத்து



வாக்கு எண்ணும் மத்திய நிலையங்கள் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பு தொடர்பாக எந்தவித சிக்கல்களும் இல்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகருமான ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் வாக்கெண்ணும் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பிற்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூரிய கூறியுள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப் பாடுகளின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 362 ஆக பொலிஸ் ஊடாகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 5 மணியுடன் நிறைவடைந்த தேர்தல் காலப்பகுதியில் குற்றச் செயல்கள் தொடர்பாக 104 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. தேர்தல் விதி மீறல் தொடர்பில் 314 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

இதற்கமைய மொத்தமாக 418 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் கூட்டமைப்பு முன்னணி

மன்னார், ஓக. 07

வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி – வீடு – 20 ஆயிரத்து 266 வாக்குகளும்,

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி – மீன் – ஆயிரத்து 288 வாக்குகளும்,

சிறிலங்கா பொதுஜன பெரமுன – மொட்டு –12 ஆயிரத்து 50 வாக்குகளும்,

ஐக்கிய மக்கள் சக்தி – ரெலிபோன் 14 ஆயிரத்து 640 வாக்குகளும்,

சுயேச்சைக் குழு 1 – கோடாரி –2 ஆயிரத்து 568 வாக்குகளும், ஈ.பி.டி.பி – வீணை – 2 ஆயிரத்து 97 வாக்குகளும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் – சைக்கில் – ஆயிரத்து 246 வாக்குகளும் பெற்றுள்ளன.

# கோப்பாய் தொகுதியில் தமிழரசு முன்னிலையில்

யாழ்ப்பாணம், ஓக. 07

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோப்பாய் தேர்தல் தொகுதியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ளது.

கோப்பாய் தொகுதியில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 9 ஆயிரத்து 365 வாக்குகளும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 5 ஆயிரத்து 672 வாக்குக ளும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 7 ஆயிரத்து 188 வாக்குகளும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 4 ஆயிரத்து 353 வாக்குகளும் பெற்றுள்ளன.

# பருத்தித்துறையிலும் வீடுதான்!

யாழ்ப்பாணம், ஓக. 07

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ளது.

பருத்தித்துறை தொகுதியில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 5 ஆயிரத்து 893 வாக்குகளும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 4 ஆயிரத்து 148 வாக்குகளும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 4 ஆயிரத்து 700 வாக்குகளும், ஈழமக்கள் ஜனநாயக கட்சி 2 ஆயிரத்து 986 வாக்குகளும், தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி 3 ஆயிரத்து 382 வாக்குகளும் பெற்றுள்ளன.

## ஊர்காவற்றுறையில் முன்னணியில் வீணை

யாழ்ப்பாணம், ஓக. 07

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 6 ஆயிரத்து 389 வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கின்றது.

அங்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி 4 ஆயிரத்து 432 வாக்குகளையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆயிரத்து 276 வாக்குகளையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆயிரத்து 79 வாக்குகளையும் பெற்றுள்ளன.

## வீடொன்றில் தீ விபத்து; வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 07

திருநெல்வேலியில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் 67 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் திடீரெனப் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தீயில் சிக்கி வயோதிபப் பெண் உயிரிழந்தார்.

தீ விபத்துக்கான காரணம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் அதிகளவு செல்லுபடியற்ற வாக்குகள்

*யாழ்ப்பாணம், ஓக. 07*

*நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எண்ணும் பணிகள் இடம்பெற்றும் வரும் நிலையில் யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில்பெருமளவானவாக்குகள் செல்லுபடியற்றவை எனத் தெரியவந் துள்ளது.*

*குறிப்பாக தபால் மூல வாக்குகள் எண்ணும்போதும் செல்லுபடியற்ற வாக்குகள் ஏராளமாகக் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.*

*தென்மராட்சியைச் சேர்ந்த தபால் மூல வாக்குகளில் 27 வாக்குகள் செல்லுபடியற்றவையாகவகைப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*கட்சியின் சின்னத்தைத் தெரிவு செய்த வாக்காளர்கள், விருப்பத் தெரி வுகளுக்கு பதிலாக சுயேச்சைக்குழு 01, சுயேச்சைக்குழு 02, சுயேச்சைக் குழு 03 என்று தெரிவுகளை மேற்கொண்டிருப்பதால் வாக்குகள் செல்லுபடியற்றவையாக மாறியிருப்பதாகதெரியவருகிறது.*

# 8,657 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 07

தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை தொடர்பில், 8,657 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமையதேசியதேர்தல்முறைப்பாடு முகாமைப் பிரிவுக்கு 1,566 முறைப்பாடுகளும் மாவட்ட தேசிய தேர்தல் முறைப்பாடு முகாமைப் பிரிவுக்கு 7,091 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாத்திரம் தேர்தல் தொடர்பில், பொலிஸ் தலைமையகத்துக்கு 72 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும், இதற்கமைய அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் 82 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என வும் தெரிவிக்கப்படுகின்றது.



05

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி ‘காலைக்கதிர்’ நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி – 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விபரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று ‘காலைக்கதிர்’ பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. மும் மலங்கள் எவை?**

...............................................................................................

**2. அன்னதானக் கந்தன் எனப் போற்றப்படும் ஈழத்து ஆலயம் எது?**

...............................................................................................

**3. பஞ்ச ஈச்சரங்கள் எவை?**

...............................................................................................

**4. நயினை ஸ்ரீ நாகபூனி அம்பாள் ஆலயத்தின் தல விருட்சங்கள் எவை?**

...............................................................................................

**5. பஞ்ச பூதங்கள் எவை?**

...............................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

05

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :.......................................................................
2. பிறந்த திகதி :.......................................................................
3. கல்வி கற்கும் தரம் :...............................................................
4. பாடசாலை :..........................................................................

..........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# பொதுத் தேர்தல்- 2020

மாவட்ட ரீதியான முடிவுகள்

## மொனராகலை மாவட்டம் இறுதி முடிவு

| | | |
|---|---|---|
| பொதுஜன பெரமுன | - 208,193 | (5) |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 54,187 | (1) |
| தேசிய மக்கள் சக்தி | - 11,429 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 3,494 | |

## பொலன்னறுவை மாவட்டம் இறுதி முடிவு

| | | |
|---|---|---|
| பொதுஜன பெரமுன | - 180,847 | (4) |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 47,781 | (1) |
| தேசிய மக்கள் சக்தி | - 6,792 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 6,525 | |

## காலி மாவட்டம் இறுதி முடிவு

| | | |
|---|---|---|
| பொதுஜன பெரமுன | - 430,334 | (7) |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 115,456 | (2) |
| தேசிய மக்கள் சக்தி | - 29,963 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 18,968 | |

## மாத்தறை மாவட்டம் இறுதி முடிவு

| | | |
|---|---|---|
| பொதுஜன பெரமுன | - 352,217 | (6) |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 72,740 | (1) |
| தேசிய மக்கள் சக்தி | - 37,136 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 7,631 | |

# அம்பாறை மாவட்டத்தில் கூட்டமைப்பு படுதோல்வி

## கருணாவும் மண்கவ்வினார்; நான்கு முஸ்லிம்கள் தெரிவு

அம்பாறை மாவட்டத்தில் ஆசனம் எதுவும் பெறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு படுதோல்வியடைந்துள்ளது.

கடந்த முறை 45 ஆயிரத்து 421வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இம்முறை 25 ஆயிரத்து 255 வாக்குகள் மட்டுமே பெற்று ஆசனம் எதையும் தனதாக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் களமிறங்கிய கருணா அம்மான் தலைமையிலான அகில இலங்கை தமிழ் மகா சபையும் 29 ஆயிரத்து 379 வாக்குகளை மாத்திரம் பெற்று ஆசனம் எதையும் கைப்பற்றவில்லை.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 12 வாக்குகளுடன் 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 274 வாக்குகளுடன் 2 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43 ஆயிரத்து 319 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தையும், தேசிய காங்கிரஸ் 38 ஆயிரத்து 911 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

# அழுதவாறு வெளியேறினார் பெண் வேட்பாளர் சசிகலா

(பிரபாகரன் டிலக்சன்)



வாக்கெண்ணும் நிலையத்தில் இருந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் ஒரே ஒரு பெண் நாடாளுமன்ற வேட்பாளர் சசிகலா ரவிராஜ் இன்று அதிகாலை அழுதவாறு வெளியேறினார்.

யாழ் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள மத்திய வாக்கெண்ணும் நிலையத்திற்கு அதிகாலை 1 மணியளவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வருகைதந்து நிலையத்துக்குள் சென்றார். அவர் உள்ளே சென்றதும் வெளியில் – முற்றத்தில் – ரகளை ஏற்பட்டது.

களேபரத்தை அடக்குவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தடியடியில் ஈடுபட்டனர். அதன் பின்னர் சசிகலா வாக்கெண்ணும் நிலையத்தில் இருந்து அழுதவாறு வெளியேறினார்.

வெளியேறும் போது 'சுமந்திரன் ஒரு ....'என ஏதோ கூறியவாறு தனது மகன் மற்றும் மகளுடன் புறப்பட்டார்.

# திருமலையில் ஓர் ஆசனத்தை தக்க வைத்தது தமிழரசுக் கட்சி

2020 நாடாளுமன்றத் தேர்தல் உத்தியோகபூர்வ முடிவுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தில் 39 ஆயிரத்து 570 வாக்குகளைப் பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) ஓர் ஆசனத்தை இம்முறையும் தக்கவைத்துள்ளது.

86 ஆயிரத்து 394 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதேவேளை, 68 ஆயிரத்து 681 வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஓர் ஆசனத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 3 ஆயிரத்து 775 வாக்குகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) 2 ஆயிரத்து 745 வாக்குகளையும், தமிழ் மக்கள் தேசிய முன்னணி ஆயிரத்து 628 வாக்குகளையும் பெற்றுள்ள போதிலும் ஆசனம் எதையும் பெறவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை சிங்களவர்களின் வாக்களிப்பு வீதம் அதிகரித்திருந்தது. அதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குக் கடந்த முறையையும் விட இம்முறை அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. கடந்த முறை 38 ஆயிரத்து 463 வாக்குகளை (ஆசனம் 1) ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெற்றிருந்தது.

இம்மாவட்டத்தில் இம்முறை மாற்றுக் கட்சிகள் போட்டியிட்டதால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி கடந்த முறை 45 ஆயிரத்து 894 வாக்குகளைப் (ஆசனம் 1) பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, கடந்த முறை 83 ஆயிரத்து 638 வாக்குகளைப் (ஆசனம் 2) பெற்றிருந்த ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை 2 ஆயிரத்து 756 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுள்ளது.

# மஹிந்த வீட்டில் கொண்டாட்டம்





பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னிலை பெற்ற நிலையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அலைபேசி ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஸ தனது டுவிட்டர் பக்கத்தில் மஹிந்த மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படங்களை பதிவிட்டு தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் மஹிந்தவின் வீட்டில் அனைவரும் ஒன்று திரண்டு மகிழ்ச்சியை வெளிக்காட்டும் வகையில் புகைப்படம் ஒன்று சமூகவலைத்தளத்தில் வெளியாகி உள்ளது.

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

# கூட்டமைப்புக்கு 3 ஆசனங்களே!

**த.தே.ம.மு., ஈ.பி.டி.பி., சு.க., த.ம.தே.கூ. என்பவற்றுக்கு தலா ஓர் ஆசனம்**

ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 ஆசனங்களையே கைப்பற்றியுள்ளது.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பன தலா ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது.

கடந்த முறை (2015) நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 2 இலட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளுடன் 5 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இம்முறை மாற்றுக் கட்சிகளின் ஆதிக்கத்தால் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 967 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்கள் மட்டுமே பெற்றுள்ளது.

அதேவேளை, கடந்த முறை ஆசனம் எதுவும் பெறாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இம்முறை 55 ஆயிரத்து 303 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது. அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இம்முறை 49 ஆயிரத்து 373 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றுள்ளது. இம்முறை புதிய கூட்டணியாகக் களமிறங்கிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் 35 ஆயிரத்து 927 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது. இதனிடையே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 45 ஆயிரத்து 797 வாக்குகளுடன் இம்முறையும் ஓர் ஆசனத்தைத் தக்கவைத்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2020 இல் வெளியிடப்பெற்றது.